தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர்

கே.எஸ். அழகிரியின் துணைவியார் திருமதி வத்சலா மறைவு!

முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.12-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரி அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி வத்சலா அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

உயிருக்கு உயிராக, பக்கத்துணையாக இருந்த வாழ்விணையரை இழந்து வாடும் சகோதரர் கே.எஸ்.அழகிரி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதியைச் சார்ந்த ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் , முன்னாள் மண்டல 8 குழு தலைவர் மறைந்த செ. கண்ணப்பன் உடலுக்கு மலரஞ்சலியினை தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி அஞ்சலி செலுத்தினார் . உடன் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு , ஜெ .கருணாநிதி எம்.எல்.ஏ, கே .ஏழுமலை எம்.சி, கோ.சு .மணி, வட்டச் செயலாளர்கள் தட்சன் ஹரிஹரன், எம்.கே.கிருஷ்ணமூர்த்தி, பி.மாரி, பி .ஜெயக்குமார்,பாபா சுரேஷ், இரா .பொன்னிவளவன் மற்றும் மேடவாக்கம் பெருமாள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

ஏகலைவா பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியரல்லாத பணிகளுக்கான தேர்வில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன. 12 –

அகில இந்திய அளவில் நடைபெறும் ஏகலைவா பள்ளிகளில், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணிகளுக்கான தேர்வு எழுதுவதில், தமிழ்ப் புறக்கணிக் கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. ஹிந்தி, ஆங்கிலத்தில் மட்டுமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எழுத முடியும் என்ற நிலையை ஏற்கவே முடியாது. தமிழ் புறக்கணிப்பை, ஹிந்தித் திணிப்பை தமிழ்நாடு பொறுத்துக் கொள்ளாது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஏகலைவா பள்ளிகள் என்ற பெயரில் இந்தியா முழுவதும் உள்ள மலைவாழ் மாணவர்களுக்கென ஒன்றிய அரசு நடத்தும் ஏகலைவா மாடல் ரெசிடென்சியல் ஸ்கூல் (EMRS) – பள்ளிகள் தமிழ்நாட்டில் விழுப்புரம், சேலம், ஊட்டி, திருவண்ணா மலை, வேலூர், நாமக்கல், காஞ்சிபுரம் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் சி.பி.எஸ்.இ பாடத் திட்டத்தில் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஏகலைவா பள்ளி... தமிழுக்கு இடமில்லை!

கடந்த 19.09.2025 இல் மேல்நிலைப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணிகளுக்கான அறிவிப்பு வெளியான நிலையில், அதற்கான தேர்வுகள் 13.12.2025, 14.12.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. தேர்வில் பகுதி6 இல் மொழிகளுக்கான பகுதியில் ஆங்கிலம், அசாமி, வங்காளம், போடோ,

டோகிரி, கரோ, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், காஷ்மீரி, காசி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, மிசோ, நேபாளி, ஒடிசா, சந்தலி, தெலுங்கு, உருது உள்ளிட்ட மொழிகள் இடம்பெற்றன.

உள்ளூர் மொழிகள் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டதாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு, தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் மொழிப் பட்டியலில், தமிழ் இல்லாத காரணத்தால் பகுதி6 இல் ஆங்கிலத்தையே தேர்ந்தெடுத்து எழுத வேண்டிய இக்கட்டான சூழல் அமைந்தது. பகுதி 6இன் 30 மதிப்பெண்களுக்கு 12 தகுதி மதிப்பெண்கள் எடுக்க வேண்டிய சூழலில், 10 கேள்விகளுக்குக் கட்டாயம் ஹிந்தியிலும், 10 கேள்விகளுக்குக் கட்டாயம் ஆங்கிலத்திலும் பதில் அளிக்க வேண்டும். அடுத்து உள்ள உள்ளூர் மொழி என்னும் பிரிவுக் கான 10 மதிப்பெண்களுக்கு என குறிக்கப்பட்டுள்ள மொழிகளில் தமிழ் இல்லாத காரணத்தால், அப் பிரிவிற்கும் ஆங்கிலத்தையே தேர்வு செய்து எழுத வேண்டிய கடுமையான நிலை தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டும் நேர்ந்துள்ளது.

40% மதிப்பெண்கள் கட்டாயமாம்!

அனைத்திந்தியத் தேர்வுகள் எதிலும், இந்தியக் குடிமக்களாகப் பங்கேற்றுப் பணியில் தேர்வடைய எல்லோருக்கும் உரிமை உண்டு தமிழர்களுக்கும் உண்டு. ஆனால், கட்டாயம் 40% மதிப்பெண்கள் எடுத்தால் தான், பிற கேள்விகளே திருத்தப்படும் என்று சொல்லப்படக் கூடிய கட்டாயமான மொழிப் பிரிவில் தமிழ் ஏன் இடம்பெறவில்லை?

தமிழ்நாட்டில் ஏகலைவா பள்ளிகள் இருக்கின்றன. அதில் பணியாற்ற மாட்டார்களா? அது குறித்த விவரம் என்ன? கடந்த சில ஆண்டுகளாகத் தமிழுக்கான ஆசிரியர்களே ஒன்றிய அரசின் கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் நிரப்பப்படவில்லை என்பது ஒன்றிய அரசின் வாயிலாகவே வெளிப்பட்டதே! அதே போல, ஏகலைவா பள்ளிகளில் உள்ள நிலைமை என்ன? எத்தனை இடங்கள் உள்ளன? அவற்றில் இட ஒதுக்கீட்டின் நிலை எவ்வாறு இருக்கிறது? தமிழ்நாட்டுப் பள்ளிகளில் நிரப்பப்படாத பணியிடங்கள் எவ்வளவு? போன்ற கேள்விகள் எழுகின்றன.

இவற்றுக்கு உரிய பதில்களை ஒன்றிய அரசு தரவேண்டாமா?

தேர்வில் உள்ளூர் மொழிகளில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதன் மூலம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளதே! இது அநீதி அல்லவா?

ஒரே ஆண்டில் இரு காசி தமிழ்ச் சங்கமத்தின் பின்னணி!

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள தேர்தலையொட்டி தங்கள் பிரச்சாரத்திற்காக, காசித் தமிழ்ச் சங்கமம் என்ற பெயரில் "சங்கிமத்தைத் ஒரே ஆண்டில் இரண்டு முறை நடத்திய ஒன்றிய அரசு, தமிழைப் போற்றுவதாக வேடம் போடும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு, தமிழுக்குத் தர வேண்டிய உரிமையை மறுப்பதேன்?

"தமிழுக்காகப் பேசுகிறோம், தமிழுக்காக உருகுகிறோம்" என்றெல்லாம் நாடகமாடும் ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?

தமிழுக்கு உரிய நிதியையும் ஒதுக்காமல், தமிழர்களுக்கு உரிய வேலை வாய்ப்பையும் பறிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ். போடும் இந்த இரட்டை வேடத்தை தமிழர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

ஏகலைவா பள்ளிப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் இணைக்கப்பட்டு, மீண்டும் தேர்வு நடத்தப்பட வேண்டும். இந்த அநீதிக்குரிய பரிகாரம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல், தமிழ் நாடெங்கும் கிளர்ச்சியைத் தொடங்க வேண்டி இருக்கும். நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து குரல் எழுப்பிட வேண்டும்.

தமிழ் புறக்கணிப்பை, ஹிந்தித் திணிப்பை எந்த நிலையிலும் தமிழ்நாடு பொறுத்துக் கொள்ளாது. நடைபெறவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் களத்திலும் இப்பிரச்சினை நிச்சயம் எதிரொலிக்கும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையை உரக்கச் சொல்லக்கூட முடியாத அளவுக்கு அடக்குமுறை!

1965ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புப் போராட்டத்தை மையமாகக் கொண்டு, அதற்கு எதிரான மாணவர்களின் எழுச்சியை ஆவணப்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திரைப்படம் 'பராசக்தி'. இந்தப் படத்தில் வரும் 25 காட்சிகளை நீக்கவும், மாற்றவும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் பரிந்து ரைத்தது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அவற்றை திரைப்படத் தயாரிப்புக் குழுவினர் மேற்கொண்டதையடுத்து அந்தப் படத்திற் கான 'யுஏ' சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு இந்தித் திணிப்பில் மும்முரமாக செயல்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதான வெறுப்பினையும் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு கக்கி இருப்பது இதன்மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



முதலாவதாக, 'பராசக்தி' திரைப்படத்தில் 'தீ பரவட்டும்' என்ற வாக்கியம் நீக்கப்பட்டு 'நீதி பரவட்டும்' என்ற வாக்கியம் சேர்க்கப்பட்டு இருக்கிறது. 1943 ஆம் ஆண்டு கம்ப ராமாயணம், பெரிய புராணம் குறித்து நடைபெற்ற விவாதங்களில் பேரறிஞர் அண்ணா, திரு. ஆர்.பி. சேது பிள்ளை, திரு.சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசிய உரைகள் புத்தகமாக வெளியிடப்பட்டு அதற்கு 'தீ பரவட்டும்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த 'தீ பரவட்டும்' என்கிற வாக்கியம்தான் தற்போது 'பராசக்தி' திரைப்படத்தில் மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது. தீ பரவட்டும்' என்கிற வாக்கியம் நாகரிகமற்ற வார்த்தை அல்ல என்பது நன்கு தெரிந்திருந்தும், அதனை ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் நீக்கி இருக்கிறது என்றால் இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, 'அண்ணாதுரை ஆளுகிறான்' என்ற வார்த்தையும் 'பராசக்தி' படத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு டிசம்பர் ஒன்றாம் தேதி சென்னை, பாலர் அரங்கத்தில் சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது தொடர்பாக நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "அண்ணாதுரை கொண்டு வந்தவற்றையெல்லாம் மாற்ற வேண்டுமென்று எண்ணும்போதே மக்கள் வெகுண்டெழுவார்கள் என்ற அச்சமும் கூடவே எழும் இல்லையா. அந்த அச்சம் இருக்கின்ற வரையில் இங்கே யார் ஆண்டாலும் 'அண்ணா துரை இந்த நாட்டை ஆள்கிறான்' என்று பொருள்" என்று பேசினார்.

டாக்டர் வா.மைத்ரேயன்,
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்.
தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவர்

இந்த வாக்கியம்தான் "பராசக்தி' திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உண்மையிலேயே இந்த நாட்டை ஆண்டார் என்பதும், அவர் ஒரு விழாவில் இதைப் பேசியிருக்கிறார் என்பதும் உண்மை. இந்த வாக்கியத்தை பயன்படுத்தக் கூடாது. இந்த உண்மை யைக்கூட சொல்லக்கூடாது என்று ஒன்றிய அரசு கூறுவது கடும் கண்டனத்திற்குரியது.

மூன்றாவதாக, 'இந்தி அரக்கி' என்ற வாசகத்தில் வருகின்ற 'அரக்கி' என்பதை வேறு விதமாக மாற்ற ஒன்றிய அரசு அறிவுறுத்தியதையடுத்து, அந்த வார்த்தையும் மாற்றப்பட்டுள்ளது. 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கோயம்புத்தூரில் 'இந்தி அரக்கி' என்று எழுதப்பட்ட கொடும்பாவியை மாணவர்கள் இழுத்துச் சென்றனர். அந்தக் காலத்தில் இந்தி மொழி திணிக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தில் இந்தித் திணிப்புப் போராட்டம் நடைபெற்றது. இது உண்மையிலேயே நடைபெற்ற ஒரு நிகழ்வு. இந்த நிகழ்வில் வன்முறைகள் ஏதும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், 'அரக்கி' என்ற வார்த்தையை நீக்குமாறு ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தர விட்டுள்ளது கேலிக்கூத்தா னது.

அடுத்தபடியாக, 'இந்தி என் கனவை அழித்தது' என்ற வாசகத்தை மாற்றியும், 'இந்தி கத்துகிட்டு' என்ற வாசகத்தை ஒலி இழக்கச் செய்தும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதுபோல் இன்னும் பல வாசகங்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலே குறிப் பிட்டுள்ள அனைத்து வார்த்தைகளும் நாகரிகமான வார்த்தைகள் என்பதோடு, உண்மையை எடுத்துரைக் கும் வார்த்தைகள் என்பதை யும், நடந்தவற்றை கூறுபவை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

உண்மையான வார்த்தைகளை மாற்றி அமைக்கச் சொல்வதும், நீக்கச் சொல்வதும் ஏற்புடையதல்ல. ஒன்றிய பாரதிய ஜனதா பாசிச அரசின் நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்கு எதிரானசெயல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, அமலாக்கத் துறை, புலனாய்வுத் துறை, வருமான வரித் துறை என்ற வரிசையில் சென்சார் போர்டையும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக ஒன்றிய அரசு பயன் படுத்துவது வெட்கக்கேடானது. இந்த பாசிசக் கொள்கையை ஒன்றிய அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசின் பாசிசக் கொள்கைக்கு தமிழ்நாட்டு மக்கள் வருகின்ற தேர்தலில் தக்கப் பாடம் புகட்ட வார்கள் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களவைத் தேர்தலைப் போல, சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஓர் இடத்தில் கூட வெற்றி பெறாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

படப்பை ஆ. மனோகரன் தலைமையில்

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் பொங்கல் விழா!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொங்கல் பரிசு வழங்குகின்றனர்!

காஞ்சிபுரம், ஜன. 12-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் பொங்கல் விழாவை முன்னிட்டு கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை வழங்கும் விழா நாளை (13.1.2026 -செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் கலைஞர் திடல் கலசங்கால் படப்பையில் நடைபெறுகிறது.

விழாவிற்கு,குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் வா. நந்தகோபால், சி. பார்த்தசாரதி, மூ. ராஜேந்திரன், எஸ். கர்ணன், குமுதா சுமன், டி. லோகநாதன், தா. ஏழுமலை, என். வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொங்கல் பரிசுகளை நாடாளுமன்ற உறுப்பினர்- கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, குழு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களை துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி வாழ்த்துரை வழங்குகின்றர்.

இதில்திருப்பெருமந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் மத்திய ஒன்றிய செயலாளர் திருமுடிவாக்கம், ஏ. மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தே மாதரம், உமா மகேஸ்வரி வந்தே மாதரம் சங்கீதா வேலு மலர்விழி தமிழமுதன் கோதண்டராமன் இளங்கோ ரா தீபக் ராஜ் கா பா ஆடலரசு லோ சுதாகர் தா ஜெகதீசன் ஜே கோகுலநாதன் ஜே குணசேகரன் ரேவதி சதீஷ் நான் பிரதீப் சே பாலகிருஷ்ணன் மகாலட்சுமி எட்டப்பன் மல்லிகா நடராஜன் இரு சப்பன் பஞ்சாட்சரம் அசோக் குமார் வேல்முருகன் வீரபாண்டியன் மற்றும் பலர் பங்கேற்கின்றனர். ஒன்றிய மாணவரணி தென் அமைப்பாளர் ஆர். ஜமீர் நன்றி கூறுகிறார்.

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவை முன்னிட்டு கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, முதல் பரிசு பெற்ற நபர்களுக்கு பிரிஜ் வழங்கினார். இரா.செந்தில்குமார் தலைமை வகித்தார். ஐட்ரிம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, அ.சுபேர்கான், வ.பெ.சுரேஷ், தா.இளையஅருணா, த.ஜெயபாலன், வி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, கலைச்செல்வன், சதிஷ்குமார், மருதுகணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 14 ஆவது அ வட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பொங்கல் தொகுப்புடன் 3000/– ரூபாய் ரொக்க தொகையும் வட்டக் கழக செயலாளர், சுற்றுச் சூழல் அணியின் மாவட்ட துணை அமைப்பாளருமான ஏகா.கார்த்திகேயன் முன்னிலையில் தலைமைப்பொது குழு உறுப்பினர் இரா. முருகேசன் வழங்கினார். நிகழ்வில் குட்டி என்கிற எத்திராஜ், அப்துல் சலீம்,டைலர் பாபு கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகரம் 18 வது வார்டு சார்பில் திராவிடசமத்துவ பொங்கல் விழா நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் ஏற்பாட்டில் நகரசெயலாளர்ஜி. ஆர்.திருமலைமுன்னிலையில் மாவட்ட பிரதிநிதி ஜெ.சுதாகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்து திமுக நிர்வாகிகள் மற்றும் மற்றும் பொது மக்களுக்கு பொங்கல் பரிசு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற நபர்களுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, தொகுதி பார்வையாளர் பிடிசி.செல்வராஜ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, காயத்திரி ஸ்ரீதர், நகர் மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.